IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.11/2015
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்பிரமணி | Caste | : | |
| Father Name | : | ஆஞ்சிநாயுடு | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of December, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—

1. நான் பாகப்பபிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியாது. வழக்கு சொத்துக்கள் பி.என்.பாளையம், வேலூர் தாலுகாவில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள தாவாவின் அட்டவணை சொத்தில் சொத்துக்கள் எந்த ஊரில் இருக்கிறது என்று நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை முதலில் ஆஞ்சிநாயுடு அதாவது எனது தந்தை முதல் வாதி தான் தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் உள்ள போது அவர் இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான்.

2. அதன் பிறகு தாவாவை திருத்தம் செய்யக் கோரி திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி திருத்தப்பட்ட வாதுரையிலும் தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ள என்பது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா அட்டவணை சொத்தில் 21 அட்டவணை சொத்து குறிப்பிடப்பட்டு அதில் எங்கும் ஊர் பெயர் குறிப்பிடாமல், சொத்து எங்கு உள்ளது என்று குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளதால் அந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. போலிநாயுடு என்பவர் எனது

தாத்தா ஆவார். அவருக்கு ஆஞ்சிநாயுடு, செங்கமநாயுடு, ஆனந்தநாயுடு, கேசவலுநாயுடு என 4 பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான்.

3. ஆஞ்சிநாயுடு எனது தகப்பனார் என்று சொன்னால் சரிதான். 2 முதல் 5 வாதிகள் ஆகிய நாங்கள் ஆஞ்சிநாயுடுவின் வாரிசு என்று சொன்னால் சரிதான். 13.02.1963 –ல் போலிநாயுடு இறந்த பிறகு ஆஞ்சிநாயுடு, செங்கமநாயுடு, ஆனந்தநாயுடு, கேசவலுநாயுடு ஆகியோர்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. சுப்பையாநாயுடு எனது பெரியப்பா, சின்னசாமிநாயுடு எனது தாய்மாமன் மற்றும் ஆஞ்சிநாயுடு எனது அப்பா ஆகிய மூவருக்கு தான் பாகப்பிரிவினை நடந்தது. ஆஞ்சிநாயுடு, செங்கமநாயுடு, ஆனந்தநாயுடு, கேசவலுநாயுடு ஆகியவர்களுக்கு பாகப்பிரிவினை நடக்கவில்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் முதல் பத்தியில் என்னுடைய தாத்தாவான போலிநாயுடு 1960–ல் இறந்த பிறகு என்னுடைய தந்தை முதல் வாதி, அவரது சகோதரர்கள் செங்கமநாயுடு, ஆனந்தநாயுடு, கேசவலுநாயுடு மற்றும் சுபாஷ்நாயுடு, கிருஷ்ணம்மாநாயுடு, சின்னசாமி நாயுடு 13.02.1963 அன்று பாகம் பிரித்து கொண்டார்கள் என்று நான் குறிப்பிட்டுள்ளது தவறா என்று சொன்னால் ஆஞ்சிநாயுடு, சுபாநாயுடு மற்றும் கிருஷ்ணநாயுடு ஆகிய மூவருக்கும் பாகப்பிரிவினை நடந்தது. மற்றவர்களுக்கு நடக்கவில்லை. பாகப்பிரிவினை நடந்த சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணமானது வா.சா.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

5. வா.சா.1 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில 1.சுப்பையாநாயுடு, 2.ஆஞ்சிநாயுடு, 3. செங்கமநாயுடு, 4. ஆனந்தநாயுடு, 5. கேசவழுநாயுடு

ஆகியோர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் எங்களுக்கு பாகப்பிரிவினை ஆகவில்லை. சுப்பையாநாயுடு எனது பெரியப்பா ஆவார். பாகப்பிரிவினை பத்திரத்தில் "A" அட்டவணை சொத்தானது சுப்பையா நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதே போல் பாகப்பிரிவினை பத்திரத்தில் "B" அட்டவணை சொத்தை ஆஞ்சிநாயுடு, சேகவநாயுடு, ஆனந்தநாயுடு, செங்கநாயுடு ஆகிய 4 பேருக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். "C" அட்டவணை சொத்தானது சின்னசாமிநாயுடு மற்றும் கிருஷ்ணமநாயுடு ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணமநாயுடு என்பவர் எனது மாமா ஆவார்.

6. பாகப்பிரிவினை பத்திரத்தின் படி எனது அப்பா ஆஞ்சிநாயுடுவிற்கு சர்வே எண்.319/1 ல் 13 சென்டும், அதேபோல் சர்வே எண்.319/1ல் 12 சென்டும், சர்வே எண்.356/3 ல் 25 சென்டும், மொத்தமாக 50 சென்ட் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.306/8B ல் 9 சென்டும், சர்வே எண்.318/1 ல் 14 சென்டும், சர்வே எண்.307/8 ல் 33.1/2 சென்டும், சர்வே எண்.319/2 ல் 18.1/2 சென்டும், சர்வே எண்.329/7A ல் 25 சென்டும், சர்வே எண்.310/4B ல் 12 சென்டும் செங்கமநாயுடும், கேசவமுநாயுடுவும் அனுபவித்து கொண்டு வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். அதே போல் ஆனந்தநாயுவிற்கு சர்வே எண்.318/2 ல் 12 சென்டும், சர்வே எண்.319/2 ல் 18.1/2 சென்டும், சர்வே எண்.319/1 ல் 13 சென்டும், சர்வே எண்.329/7B ல் 18 சென்டும், சர்வே எண்.310/4A 2.1/2 சென்டும் ஆனந்த நாயுடு அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

7. கேசவமுநாயுடுவும், செங்கமநாயுடுவும் 29.01.1998 ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொன்னால்

சரிதான். 27.09.1988–ல் என்னுடைய தந்தை ஒரு சொத்தை விற்பனை செய்தார் என்றால் இல்லை நான் தான் விற்பனை செய்தேன். நான் இந்த வழக்கில் 3–ஆம் வாதி ஆவேன். 1963–லிலேயே எங்களுக்கு பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்று சொன்னாலும், பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தற்போது மதிப்பு கூடிவிட்டதால் இந்த வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே, பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நானே பிரதிவாதிகளுக்கு சொத்தை கிரையம் கொடுத்த பிறகு பாகப்பிரிவினை ஆகவில்லை என்று வழக்காட முடியாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI